**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்**
அசல் வழக்கு எண். 135/2020
**PW1**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.மோகன் | த/பெ.திரு.முனிபாபு ராமா | நாள்.13.08.2025 |

வா.சா.1 அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

காந்தாமணி அம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் காந்தாமணி அம்மாளுக்கு யூ.டி.ஆர் திட்டத்தின் மூலம் பட்டா வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஷாலினி ஷீலாவுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ல் 2 வது பக்கத்தில் காந்தாமணி அம்மாளும், சேஷன் என்பவரும் சொத்தை பரிவர்த்தனை செய்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பரிவர்த்தனை மூலம் கிடைத்த சொத்திற்கு காந்தாமணி அம்மாளுக்கு பட்டா எண்.32 வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. காந்தாமணி அம்மாளுக்கு யூ.டி.ஆர் திட்டத்தில் பட்டா கிடைத்ததாக எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. காந்தாமணி அம்மாளுக்கு பரிவர்த்தனை சொத்து வந்தது என்றால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. 1977 ம் ஆண்டு பரிவர்த்தனை ஆவணம் செல்லாது என்று நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தை பார்த்த பிறகு காந்தாமணி அம்மாளுக்கு பரிவர்த்தனை மூலம் சொத்து கிடைத்தது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை.

3. அசல் வழக்கு எண்.16/2009 என்பதை நான் தான் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.3 வழக்கில் யார் தாக்கல் செய்தார் என்றால் அப்போதைய கோவில் தர்மகர்த்தா கந்தசாமி தாக்கல் செய்தார். அதில் ஷாலினி, காந்தாமணி அம்மாள், ஆர்.வி.சேஷன் ஆகியோர் தரப்பினர்கள் என்றால் சரிதான். கோவில் நிலத்திற்கு

காந்தாமணி அம்மாள் பெயரில் பட்டா வந்துவிட்டது அவர் நிலத்தை ஷாலினி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். அதனால் ஊர் சார்பாக வழக்கு போட்டோம். அந்த வழக்கில் காந்தாமணி அம்மாளும், ஷாலினியும் கோவிலுக்கே கொடுப்பதாக சமரசம் செய்து கொண்டோம்.

4. கந்தசாமி என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. கந்தசாமி தாக்கல் செய்த வழக்கில் காந்தாமணி அம்மாள் ஷாலினிக்கு எழுதிக்கொடுத்த கிரையம் செல்லாது என்று பரிகாரம் கேட்டிருந்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கை பொறுத்து எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். அந்த வழக்கில் லோக் அதலாத்தில் யார் யார் முன்னிலை ஆனார்கள் என்றால் நான், கந்தசாமி, காந்தாமணி அம்மாள் காந்தாமணி அம்மாளின் வழக்கறிஞர் ராஜேந்திரன் ஆகியோர் போனோம். அந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

5. சமரசம் செய்த தேதியில் நான் நீதிமன்றம் ஆஜரானதற்கு ஆவணம் இல்லை என்றால் சரிதான். கோவில் தரப்பில் வழக்கறிஞர் அய்யாசாமி ஆஜரானார். பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ராஜேந்திரன் வந்தார். லோக் அதலாத் டிகிரியில் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் காந்தாமணி அம்மாள், ஷாலினி மற்றும் கந்தசாமி ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். ஆர்.வி.சேஷன் அப்போது வரவில்லை என்றால் சரிதான். கோவில் சார்பாக வாதியின் வழக்கறிஞர் கையெழுத்து செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. லோத் அதலாத் டிகிரியில் என்ன உள்ளது என்று பார்த்தேனா என்றால் எனக்கு அது பற்றிய விவரம் தெரியவில்லை.

6. வா.சா.ஆ.3 சமாதான மெமோவில் வாதியின் வழக்கறிஞர் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். டிகிரியிலும் வாதியின் வழக்கறிஞர் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். டிகிரியில் சொத்துக்கு காந்தாமணி

அம்மாள் பெயரில் யூ.டி.ஆர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். டிகிரியில் சொத்து காந்தாமணி அம்மாளுக்கு பரிவர்த்தனை மூலம் கிடைத்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சமாதான குறிப்பாணையில் காந்தாமணி அம்மாளுக்கு பரிவர்த்தனை மூலம் கிடைத்த விவரம் மறைக்கப்பட்டுள்ளது என்றால் பரிவர்த்தனையை பற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு சொத்து ஷாலினிக்கு விற்பனை செய்யப்பட்ட பிறகும் அது காந்தாமணி அம்மாள் அனுபவத்தில் இருந்ததாக வா.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் என குறிப்பிடுவதற்கு பதிலாக 1வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் 1வது பிரதிவாதி என்று தான் உள்ளது. 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் என குறிப்பிடுவதற்கு பதிலாக 1வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

8. சமாதான குறிப்பாணையில் காந்தாமணி அம்மாள் தான் வாதிக்கு சுவாதினம் ஒப்படைத்ததாக மாற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த சமாதான குறிப்பாணையில் கண்ட விவரங்கள் அப்படியே டிகிரியில் அப்படியே உள்ளது என்றால் சரிதான். அந்த டிகிரி எந்த தேதியில் கொடுத்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை 2011ம் ஆண்டு. அந்த டிகிரி படி கோவில் சொத்தின் சுவாதினத்தை எடுத்துக்கொண்டதா என்றால் எடுத்துக்கொண்டது. 2011 முதல் தற்போது வரை சொத்தின் பட்டா கோவில் பெயரில் வந்துள்ளதா என்றால் இல்லை.

9. சொத்தின் பட்டா தற்போது ஷாலினி பெயரில் உள்ளது. 2011க்கு பிறகு ஷாலினி பெயரில் உள்ள பட்டாவை மாற்ற சொல்லி செய்யூர் தாலுக்கா

அலுவலகத்தில் மனு கொடுத்தோம். அந்த மனு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் கொடுத்த மனுவின் பேரில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 டிகிரியில் வாதியின் வழக்கறிஞர் கையெழுத்து செய்யாததாலும் அதில் உள்ள வாசகங்கள் தவறாக உள்ளதாலும் அந்த டிகிரி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

10. ஷாலினி என்பவர் கந்தசாமியின் மருமகள். அந்த லோக் அதலாத் டிகிரி ஆன தேதியில் ஷாலினி நீதிமன்றமே வரவில்லை என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் வா.சா.ஆ.3 வழக்குக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கில் சொத்தின் சுவானதினத்தை ஷாலினி யாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் ஷாலினியை பொறுத்து வா.சா.ஆ.3 செல்லாது என்றால் சரியல்ல. அதனால் தான் ஷாலினி சொத்தின் மீது அவருக்கு இருக்கும் உரிமையை பொறுத்து இந்த வழக்கில் 2 வது பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சொத்தின் பட்டா ஷாலினி பெயரில் இருப்பதால் அவர் தான் சொத்தின் உண்மையான உரிமையாளர் என்பதாலும் அவர் ஷீலாவுக்கு எழுதிகொடுத்த கிரையப் பத்திரம் செல்லும் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.16/2009 ன் அடிப்படையில் இந்த வழக்கில் நாங்கள் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

11. 3 வது பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமலேயே அசல் வழக்கு எண்.16/2009 ல் சமாதான குறிப்பாணையை தாக்கல் செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.16/2009 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு 1 வது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாத நிலையில் அது 2 வது பிரதிவாதியையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. காந்தாமணி அம்மாள் பெயரில்

பட்டா வந்த பிறகு கோவில் பெயரில் பட்டா வரவில்லை என்றால் சரிதான்.

12. 1977 க்கு பிறகு கோவில் பெயரில் அடங்கல் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சுவாதினம் கோவிலிடம் உள்ளதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. காந்தாமணி அம்மாளை தொடர்ந்து ஷாலினியும் அவரை தொடர்ந்து ஷீலாவும் சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. காந்தாமணியின் ஆவணம் செல்லாது என பரிகாரம் கேட்காமல் ஷீலாவின் ஆவணம் மட்டும் செல்லாது என் கேட்பது தவறாகும் என்றால் சரியல்ல. 1977 க்கு பிறகு சொத்தின் மீது கோவிலுக்கு உரிமையோ, சுவாதினமோ எந்த காலத்திலும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக சுவாதின மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை, இல்லை**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)